பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

15 03 2025 **SATURDAY** **7.15 AM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. அஸ்ஸாமில் அதி நவீன காவல் அகாடமியை மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று தொடங்கிவைக்கிறார்.

2. மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் சென்னையில் இன்று ஐபர் லூப் சோதனை முயற்சியை ஆய்வு செய்கிறார்.

3. உலக நுகர்வோர் உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுவதையொட்டி நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

4. கனடாவின் புதிய பிரதமராக திரு மார்க் கார்னி பதவியேற்றுள்ளார்.

5. மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் மும்பை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

<<<<>>>>

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, மூன்று நாள் பயணமாக அஸ்ஸாம் மாநிலத்திற்கு சென்றுள்ளார்.

நேற்றிரவு **'Jorhat'** விமான நிலையத்தில் அவரை மாநில முதலமைச்சர் திரு ஹிமந்த பிஸ்வ சர்மா மற்றும் அமைச்சர்கள் வரவேற்றனர்.

இன்றும், நாளையும் அங்கு நடைபெறவுள்ள பல்வேறு நிகழ்ச்சிகளில் திரு அமித் ஷா கலந்துகொள்கிறார்.

அஸ்ஸாம் ரைஃபிள்ஸ் மற்றும் மிசோரம் அரசுக்கு இடையே நிலப்பரிமாற்ற நிகழ்ச்சியில் தாம் கலந்துகொள்ள உள்ளதாக சமூக வலைதள பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

காவல் அகாடமி துவக்க விழாவிலும், வடகிழக்கு மாநிலங்களில் மத்திய அரசின் மூன்று புதிய குற்றவியல் சட்டங்கள் அமல்படுத்தப்படுவது குறித்த ஆய்வுக்கூட்டத்திலும் கலந்துகொள்ள உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாளை கோக்ரஜார் மாவட்டத்தில் அனைத்து போடோ மாணவர் அமைப்பின் 57-ஆவது ஆண்டு மாநாட்டில் திரு அமித் ஷா பங்கேற்கிறார்.

<<<<>>>>

மத்திய தகவல் ஒலிபரப்பு மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு அஷ்வினி வைஷ்ணவ் இரண்டுநாள் பயணமாக சென்னை வந்துள்ளார்.

அவர் இன்று திருவள்ளூர் மாவட்டத்தில் மின்னணு தொழில் நிறுவனம் ஒன்றை தொடங்கிவைக்கிறார்.

சென்னை தையூரில் ஐ ஐ டி உதவியுடன் அமைக்கப்பட்டுள்ள ஐபர் லூப் தளத்தை அவர் பார்வையிட்டு, மாணவர்களுடன் கலந்துரையாட உள்ளார்.

ஐபர் லூப் தொழில்நுட்பத்தில் இந்தியாவும், சீனாவும் சோதனைகளை மேற்கொண்டு வருகின்றன.

வர்த்தக ரீதியலான போக்குவரத்துக்கு 50 கிலோமீட்டர் நீளத்திற்கு ஐபர் லூப் பாதையை அமைக்க இந்தியா முயற்சித்து வருகிறது.

இதற்கான சோதனையில் ஈடுபட சென்னை தையூரில் 422 மீட்டர் நீளத்திற்கு ஐபர் லூப் பாதை அமைக்கப்பட்டுள்ளது.

இன்று மாலை சென்னையில் உள்ள புதுமை கண்டுபிடிப்புகளுக்கான மையத்திற்கும் அவர் சென்று ஆய்வு செய்ய உள்ளார்.

<<<<>>>>

பிரதமரின் சூரிய மின் திட்ட பயன்பாட்டில் மகாராஷ்ட்ர மாநிலம் இரண்டாவது இடத்தை பிடித்துள்ளதாக அம்மாநில முதலமைச்சர் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின்கீழ் ஒரு லட்சத்து 92 ஆயிரத்து தொள்ளாயிரத்து 36 சூரிய மின் திட்டங்கள் நிறுவப்பட்டு செயல்பாட்டில் உள்ளதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தொடங்கப்பட்ட இத்திட்டத்தில் இம்மாதம் 10-ஆம் தேதி வரை 10 லட்சத்து 9 ஆயிரம் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

2026-27-ஆம் ஆண்டுக்குள் ஒரு கோடி குடும்பங்கள் பயன்பெறும் வகையில் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் திரு தேவேந்திர பட்நவிஸ் தெரிவித்தார்.

<<<<>>>>

மத்திய அரசு மக்களவைத் தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது மாநிலங்களுடன் கலந்து ஆலோசித்து முடிவெடுக்க வேண்டும் என்று கேரள முதலமைச்சர் திரு பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து திருவனந்தபுரத்தில் அவர் விடுத்துள்ள ஒரு அறிக்கையில், தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது ஏற்கனவே விகிதாச்சார அடிப்படையில் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகுதிகளின் எண்ணிக்கை குறையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய அரசு அறிமுகப்படுத்திய மக்கள் தொகை கட்டுப்பாட்டுத் திட்டம் மற்றும் குடும்ப கட்டுப்பாட்டுத்திட்டம் ஆகியவற்றை சிறப்பாக செயல்படுத்திய மாநிலங்கள் தொகுதி மறுவரையறைகளின்போது பாதிக்கப்படாக்கூடாது என்பதில் கவனமாக இருக்க வேண்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

எனவே மக்களவைத் தொகுதிகளை மறுவரையறை செய்யும்போது மத்திய அரசு அவசர அவசரமாக முடிவெடுக்கக்கூடாது என்றும் திரு பினராயி விஜயன் அந்த அறிக்கையில் கேட்டுக்கொண்டுள்ளார்.

<<<<>>>>

இந்திய ராணுவத்தினரும், அஸ்ஸாம் ஆயுதப்படையினரும் நேற்று மணிப்பூரில் நான்கு மாவட்டங்களில் நடத்திய திடீர் சோதனையில் ஏராளமான ஆயுதங்களும், வெடிமருந்துகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இம்பால் மேற்கு மற்றும் சந்தேல் உள்ளிட்ட நான்கு மாவட்டங்களில் இந்த சோதனை நடைபெற்றதாக பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவித்தார்.

கையெறி குண்டுகள், வெடிமருந்துகளும் கண்டெடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

**‘Kangpokpi ’** மாவட்டத்தில் அழிக்கப்பட்ட பதுங்கு குழிகளையும் பாதுகாப்புப்படையினர் கண்டுபிடித்தனர்.

குக்கி மற்றும் மெய்தி சமூகத்தினர் இடையே ஏற்பட்ட மோதலின்போது ஆயுதம் தாங்கிய குழுவினர் இந்த பதுங்கு குழிகளை பயன்படுத்தியதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

<<<<>>>>

உலக நுகர்வோர் உரிமைகள் தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனை முன்னிட்டு, நுகர்வோர் உரிமைகளை வலியுறுத்தும் வகையில், நாடு முழுவதும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

நிலையான வாழ்க்கை முறைகளுக்கு, நியாயமான மாற்றம் என்பதே இந்தாண்டுக்கான உலக நுகர்வோர் உரிமைகள் தினத்தின் கருப்பொருளாகும்.

நுகர்வோருக்கு அதிகாரமளித்தல், அவர்களின் குறைகளை தீர்க்கும் வழிமுறைகளை வலுப்படுத்துதல், வெளிப்படையான மற்றும் நியாயமான சந்தையை உறுதி செய்தல் என மத்திய அரசு நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

இந்நிலையில், மாநில நுகர்வோர் நல நிதிக்காக மத்திய அரசு 32 கோடியே 68 லட்சம் ரூபாயை விடுவித்துள்ளது.

நுகர்வோரின் உரிமைகளை பாதுகாக்கும் திட்டங்களுக்கு இந்த நிதி பயன்படுத்தப்படும்.

2024-25-ஆம் ஆண்டு நிதியாண்டில் 24 மாநிலங்கள் ஒரு யூனியன் பிரதேசத்தில் நுகர்வோர் நல நிதியம் உருவாக்கப்பட்டுள்ளது.

<<<<>>>>

பழம்பெரும் திரைப்பட தயாரிப்பாளர் தேப் முகர்ஜி மும்பையில் நேற்று காலமானார். அவருக்கு வயது 83.

சில மாதங்களாக உடல்நலம் குன்றியிருந்த அவர், மருத்துவமனையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

1960 முதல் 1970-ஆம் ஆண்டு வரை புகழ்பெற்ற பல திரைப்படங்களை தேப் முகர்ஜி தயாரித்துள்ளார்.

அவரது மறைவுக்கு திரைப்படத்துறையினர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

<<<<>>>>

சட்டவிரோதமாக மாநிலங்களுக்கு இடையே ஆயுதங்களை கடத்திச்செல்லும் கும்பல் ஒன்றை தில்லி மாநகர காவல்துறையினர் கைது செய்துள்ளனர்.

மத்தியப்பிரதேசம் மற்றும் பீகாரில் தயாரிக்கப்படும் ஆயுதங்களை இந்த கும்பல் தில்லியில் விற்பனை செய்து வந்துள்ளது விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து மூன்று பேரை காவல்துறையினர் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்களிடமிருந்து ஐந்து கைத்துப்பாக்கிகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

<<<<>>>>

சர்வதேச விண்வெளி மையத்தில் உள்ள விண்வெளி ஆய்வாளர்கள் சுனிதா வில்லியம்ஸ், **'Butch Wilmore** **'**ஆகியோரை பூமிக்கு அழைத்துவர ஸ்பேஸ்-எக்ஸ் தளத்திலிருந்து ராக்கெட் புறப்பட்டு சென்றுள்ளது.

**'Falcon-9** என்ற அந்த ராக்கெட் நேற்றிரவு புறப்பட்டு சென்றதாகவும், திட்டமிட்டபடி அது சர்வதேச விண்வெளி மையத்துடன் இணைக்கப்பட்டு, இரண்டு விண்வெளி ஆய்வாளர்களும் பூமிக்கு பத்திரமாக அழைத்து வரப்படுவார்கள் என்று நாசா தெரிவித்துள்ளது.

<<<<>>>>

கனடாவின் புதிய பிரதமராக திரு மார்க் கார்னி பதவியேற்றுள்ளார்.

59 வயதாகும் திரு கார்னி, கனடா வங்கியின் முன்னாள் ஆளுநராக பதவி வகித்தவர்.

அமெரிக்க அதிபராக திரு டொனால்டு ட்ரம்ப் பதவியேற்ற பின்னர் கனடா – அமெரிக்கா இடையிலான உறவு சீர்குலைந்துள்ள நிலையில், பிரதமராக திரு கார்னி பதவியேற்றிருப்பது முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

ஏற்கனவே பிரதமராக இருந்த திரு ஜஸ்டின் ட்ருடோ, கடந்த ஜனவரி மாதம் தமது பதவியை ராஜினாமா செய்தார்.

இதையடுத்து, லிபரல் கட்சியின் தலைமை பதவிக்கான போட்டியில் திரு மார்க் கார்னி வெற்றிபெற்றார்.

முன்னதாக, பிரெஞ்ச் மற்றும் ஆங்கிலத்தில் பதவியேற்றுக்கொண்ட திரு மார்க் கார்னி, அமெரிக்கா வர்த்தக போரை தொடரும் வரை அந்நாட்டில் இருந்து கனடாவில் இறக்குமதியாகும் பொருட்கள் மீது வரி விதிப்பதை கனடா கைவிடாது என்று கூறினார்.

<<<<>>>>

தெற்கு லெபனானில் உள்ள முக்கியமான ஐந்து இடங்களில் இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் தொடர்ந்து முகாமிட்டிருப்பார்கள் என்று இஸ்ரேல் பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **'Israel Katz'**அறிவித்துள்ளார்.

இஸ்ரேல் - லெபனான் எல்லையில் தற்போதுள்ள பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக நேற்று பாதுகாப்புப்படை உயரதிகாரிகளுடன் அவர் கலந்தலோசித்தபோது இதனை தெரிவித்தார்.

லெபனானில் இருந்து தீவிரவாத இயக்கங்கள் இஸ்ரேலுக்கு எதிராக செயல்படுவதை தடுக்கும் வகையில் தொடர்ந்து அந்நாட்டின் முக்கியமான இடங்களில் இஸ்ரேல் பாதுகாப்புப்படையினர் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

இஸ்ரேல் - லெபனான் இடையே நீண்டகால மோதலை முடிவுக்கு கொண்டுவரும் வகையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 27-ஆம் தேதிமுதல் இருநாடுகளுக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் அமலில் உள்ளது.

<<<<>>>>

மகாராஷ்ட்ரா மாநிலம் மும்பையில் **'Bodwad '**என்ற இடத்தில் லெவல் கிராசிஙகை வேகமாக கடக்க முயன்ற லாரி நடுவழியில் திடீரென நின்றதால், அதன் மீது அமராவதி எக்ஸ்பிரஸ் ரயில் மோதியது.

இந்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை . இருப்பினும், அந்த வழித்தடத்தில் சுமார் ஆறு மணிநேரம் ரயில் சேவைகள் பாதிக்கப்பட்டன.

ரயில்வே மற்றும் மாநில காவல்துறை உதவியுடன் மீட்புப்பணிகள் விரைவுப்படுத்தப்பட்டு, லெவல் கிராசிங்கில் சிக்கிய லாரி அகற்றப்பட்டது.

இதன்பின்னரே, ரயில் போக்குவரத்து சீரானதாக மேற்கு ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்தன.

<<<<>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

மகளிர் பிரிமியர் லீக் கிரிக்கெட் இறுதிப்போட்டியில் மும்பை அணி இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

மும்பையில் நடைபெறவுள்ள இப்போட்டி இன்றிரவு எட்டு மணிக்கு தொடங்க உள்ளது.

லீக் சுற்று முடிவில் தில்லி மற்றும் மும்பை அணிகள் தலா பத்து புள்ளிகள் பெற்ற போதிலும் ரன் விகித அடிப்படையில் தில்லி அணி முதலிடத்தை பெற்று இறுதிப்போட்டிக்கு நேரடியாக முன்னேறியது.

எலிமினேட்டர் சுற்று போட்டியில் குஜராத் அணியை வீழ்த்தி மும்பை அணி இறுதிப்போட்டிக்கு முன்னேறியது.

---------------

ஆல் இங்கிலாந்து பேட்மிண்டன் போட்டியில் நேற்று பர்மிங்ஹாமில் நடைபெற்ற காலிறுதி ஆட்டத்தில் சீனாவின் **'Li Shi Feng'** 21-10, 21-16 என்ற செட் கணக்கில் இந்தியாவின் லக்ஷயா சென்னை வென்றார்.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் சீனாவின் **'Liu Shengshu – Tan Ning '** இணை, 21-14, 21-10 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **'Treesa Jolly – Gayathri Gopichand '**இணையை வென்றது.

<<<<>>>>